**FIRST INFORMATION REPORT** — **TAMIL NADU POLICE**

**முதல் தகவல் அறிக்கை** — INTEGRATED INVESTIGATION FORM-I

~~(Under Section 154 Cr.P.C.)~~ u/s 173 BNSS

~~(குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்)~~ C 8213036

1. District மாவட்டம்: கிருஷ்ணகிரி   PS காவல்நிலையம்: ஊ.த.பிரிவு   Year ஆண்டு: 2024   FIR No. மு.த.அ. எண்: 10/AC/2024   Date நாள்: 21.11.2024

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988   Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: திருத்தப்பட்ட சட்டம் 2018   Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from நாள் முதல் : —   Date to நாள் வரை : 20.11.2024
   Time Period நேர அளவு :   Time from நேரம் முதல் :   Time to நேரம் வரை : சுமார் 15.30 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.11.2024   Time நேரம் : 17.15 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time நேரம் : 18.15 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 75 கி.மீ தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் —   (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலகம், பள்ளப்பள்ளி.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —   District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் C. முருகேஷ்   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K. சந்திரப்பா
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 30   (d) Nationality : நாட்டினம் இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் விவசாயம்   (g) Address : முகவரி 1/95, பள்ளப்பள்ளி, தேவர உலிமங்கலம் அஞ்சல், தேன்கனிக் கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars: (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. தம்பிதுரை, கிராம நிர்வாக அலுவலர், பள்ளப்பள்ளி கிராமம், தேன்கனிக் கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved: ——
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: ——
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required):
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித்தாள்களில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

C. Murugesh 21.11.2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

21/11/24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

21.11.2024 at 19.00 hrs

Name: பெயர் S. பிரபு
Rank: நிலை ........................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
உ.த.க. பிரிவு,
கிருஷ்ணகிரி.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 10/AC/2024, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC amendment Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

இன்று 21.11.2024 ம் தேதி மாலை 17.15 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தேவரஉலிமங்கலம் அஞ்சல், பள்ளப்பள்ளி கிராமத்தை சேர்ந்த (லேட்) திரு.K.சந்திரப்பா மகன் திரு.C.முருகேஷ் என்பவர் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி வாய்மொழியாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு. நான் கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிகோட்டை வட்டம், தேவரஉலிமங்கலம் அஞ்சல், பள்ளப்பள்ளி கிராமத்தில் என் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு தமிழில் எழுத, படிக்க தெரியாது தமிழில் பேச மட்டும் தெரியும். நான் தெலுங்கு மீடியத்தில் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு திருமணமாகி மனைவி மற்றும் மகள் உள்ளனர். நான் விவசாய குடும்பத்தை சேர்ந்தவன். எங்களது குடும்ப சொத்தான 2 ஏக்கர் நிலத்தில் மழை காலத்தில் மட்டும் பயிர் செய்வோம். அதனால் எங்களது பக்கத்து ஊரான கொள்ளப்பள்ளியில் உள்ள ஸ்ரீசாய்ராம் பியூல்ஸ் என்ற பெட்ரோல் பங்கில் கேஷியராக மாத சம்பளம் ரூ.12,000/- பெற்று வேலை செய்து வருகிறேன். எனது அப்பா K.சந்திரப்பா 20.09.2024-ஆம் தேதி மதியம் நெஞ்சு வலியினால் இறந்து விட்டார். அதற்கு இறப்பு சான்று வாங்குவதற்கு எங்கள் பள்ளப்பள்ளி கிராம நிர்வாக அலுவலகத்தில் தகவல் கொடுத்தேன். பின்னர் அதனை பதிவு செய்து எனது அப்பாவின் இறப்பு சான்றினை அக்டோபர் மாதம் இரண்டாவது வாரத்தில் ஒரு நாள் பள்ளப்பள்ளி கிராம உதவியாளர் திருமதி.புஷ்பம்மா கொண்டு என்னிடம் வந்து கொடுத்தார். அதன் பிறகு எனது அம்மா பெயரில் உள்ள எங்கள் குடும்ப சொத்தான இரண்டு ஏக்கர் நிலத்தினை நானும் என் உடன் பிறந்த அண்ணன் மற்றும் அக்காவும் பாகப்பிரிவினை செய்து கொள்ள முடிவு செய்தோம். அதற்காக எனது அப்பாவுக்கு வாரிசு சான்றிதழ் வாங்குவதற்காக 21.10.2024-ஆம் தேதி

தேன்கனிகோட்டை தாலுகா ஆபீசில் உள்ள இ-சேவை மையத்தில் அதற்கு தேவையான மற்ற சான்றுகளுடன் ஆன்லைனில் விண்ணப்பித்தேன். அடுத்த நாள் 22.10.2024-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு பள்ளப்பள்ளி கிராம உதவியாளர் புஷ்பம்மா என்னை செல்போனில் அழைத்து வாரிசு சான்று விண்ணப்பம் சம்பந்தமாக பேச வேண்டும் என்று VAO ஆபிசுக்கு வரச்சொன்னார். அன்று மதியம் சுமார் 2.00 மணிக்கு VAO ஆபிசுக்கு சென்று பார்த்தபோது VAO ஆபிசில் இல்லை எனவே நான் அங்கிருந்து திரும்பி வந்துவிட்டேன். அதன்பிறகு நான்கைந்து நாட்கள் கழித்து எங்கள் வீட்டு பக்கமாக எங்கள் கிராம VAO திரு.தம்பிதுரை வந்தபோது அவரிடம் வாரிசு சான்றுக்கு விண்ணப்பித்தது சம்பந்தமாக பேசியபோது அவர் பணம் ரூ.6000/- கொடு சீக்கிரம் வாரிசு சான்று வாங்கி கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். நான் சரிங்க சார் பணம் ரெடி பண்ணிட்டு வர்றேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். அதன்பிறகு வேலை காரணமாக VAO-வை நான் பார்க்கவில்லை. பிறகு 20.11.2024-ம் தேதி மதியம் சுமார் 2.20 மணிக்கு VAO திரு.தம்பிதுரையிடம் நான் செல்போனில் பேசி வாரிசு சான்று சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர் நேரில் ஆபீசுக்கு வரச்சொன்னார். அப்போது நான் தேன்கனிக்கோட்டை பக்கம் சொந்த வேலையாக இருந்ததால் சுமார் ஒருமணி நேரம் கழித்து VAO ஆபீசுக்கு போய் அவரை பார்த்தேன். அப்போது அவர் நான் ஏற்கனவே சொன்னவாறு பணம் ரூ.6000/- கொடுத்தால் விரைவில் வாரிசு சான்று வாங்கி கொடுத்துவிடுகிறேன் என்றார். நான் கொஞ்சம் பணத்தை கம்மி பண்ணி சொல்லுங்க சார் என்று கேட்டேன். அதற்கு அவர் சரி ஒரு நாலாயிரம் ரூபாய் கொடு சீக்கிரம் பண்ணிடலாம் என்று சொன்னார். சரிங்க சார் பணம் ரெடி பண்ணிட்டு வர்றேன் என்று அவரிடம் சொல்லிவிட்டு நான் வந்துவிட்டேன். எனக்கு எங்கள் கிராம VAO-விடம் பணம் ரூ.4000/- லஞ்சமாக கொடுத்து வாரிசு சான்று வாங்குவதற்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட VAO திரு.தம்பிதுரை மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட புகாரை நான் சொல்லச்சொல்ல, நீங்கள் லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்தில் உள்ள

கம்ப்யூட்டரில் டைப் அடித்து அதை என்னிடம் படித்து காண்பிக்க, நான் சொன்னபடி சரியாக இருந்தது. இப்படிக்கு (ஒப்பம்) C.முருகேஷ், 21.11.2024.

Sir, an oral complaint has been received by me on 21.11.2024 at 17.15 hrs and typed the same in computer. It has been read by me to the complainant. Further a confidential verification on the general reputation of the accused has been made and found that the reputation of the accused is learnt to be not good and nothing adverse against the informant. The information given in his oral complaint is genuine. Therefore, a case in Krishnagiri V&AC Cr.No.10/AC/2024 u/s 7 (a) of the PC Act, 1988 as amended by the PC Amendment Act, 2018 was registered today 21.11.2024 at 18.15 hrs against the accused Tr.Thambidurai. The original FIR and complaint is sent to Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Krishnagiri and remaining copies are sent to the officers concerned.

21/11/24

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கிருஷ்ணகிரி.